உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.302/2021

| | |
|---|---|
| பெயர் | :யூசுப் சாகிப் (அ.சா.1) |
| தகப்பனார் பெயர் | :பாகாசாகிப் |
| கணவர் பெயர் | : |
| வயது | :65 |
| கிராமம் | :புதுவயல் |
| வட்டம் | :காரைக்குடி தாலுகா, சிவகங்கை |
| தொழில் | :டிரைவர் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

23.01.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை. அவர்கள் யார் என்றே எனக்கு தெரியாது. 09.08.2019 அன்று காலை 7.00 மணியளவில் என்னுடைய ஓட்டுநர் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். ஓட்டுநரின் பெயர் பரித் ஆகும். நான் முன்பு டாரஸ் லாரி வைத்திருந்தேன். அதன் உரிமையாளர் என்ற முறையில் என்னிடம் தகவல் சொன்னார். என்னுடைய லாரி ஆண்டவர் என்ற பெயரில் உள்ளது. வண்டியின் பதிவு எண் முழுவதுமாக நினைவில்லை. டிரைவர் என்னிடம் அவருடைய கையை கட்டிப்போட்டு பணம் ரூபாய் 12000த்தை பறித்து கொண்டதாக தகவல் கொடுத்தார். மேலூர் காவல்நிலையத்தில் இருப்பதாகவும், என்னை வரும்படியும் டிரைவர் அழைத்தார். நான் அப்போது என்னுடைய வீட்டில் புதுவயலில் இருந்தேன். தகவல் கிடைத்தவுடன் அப்போது காலை சுமார் 10.00 மணியளவில் நான் மேலூர் காவல்நிலையத்திற்கு வந்தேன். காவலர்களிடம் உரிமையாளர் என்ற முறையில் நான் நடந்தவற்றை கூறினேன்.

காவல்நிலையத்தில் நடந்த சம்பவத்தை கூறி புகாரை ஓட்டுநரான பரித் கொடுத்தார். புகார் கொடுக்கும் போது நானும் உடன் இருந்தேன். நான் என்னுடைய லாரியை விற்பனை செய்ததால் ஓட்டுநர் பரித் எங்கு இருக்கிறார் என்பது எனக்கு தெரியவில்லை. ஆஜர் எதிரிகளை நான் பார்த்ததில்லை என்பதால் அதை பற்றி தெரியாது என்று கூறிவிட்டேன் காவலர்கள் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை :

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது, டிரைவர் கூறியததை தான் நான் தெரிவிக்கிறேன். பரித் கொடுத்த புகாரில் நான் கையெழுத்து எதுவும் போடவில்லை. புகார் கொடுக்கப்படும் போது நான் உடன் இல்லை என்றும், வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் தான் கையெழுத்து செய்தேன் என்னிடம் வாக்குமூலம் வாங்கப்பட்டது. வாக்குமூலத்தை நான் படித்து பார்க்கவில்லை. கையெழுத்து மட்டும் போட்டேன். களவு சம்பந்தமாக எழுதப்பட்டதாக குறிப்பிட்டார்கள் நான் படித்து பார்க்கவில்லை. டிரைவர் கூறியதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், நான் எதையும் படித்து பார்க்காமல் கையெழுத்து செய்துள்ளதால் நடந்த உண்மை தெரியாது என்றால் சரியல்ல.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.01.23 18:01:28 +0530

Assistant Sessions Judge

Melur